DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.136/2024**

Deposition of Witness : PW-1 (மனுதாரர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சிவரோஜா. | Husband Name | : | லோகேஷ். |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 05.02.2026.

---

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சுரேஷ் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் :

நான் இம்மனுவின் மனுதாரர். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைகள் தான், அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். நான் என் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.7** வரை குறியீடு செய்யப்படுகிறது. (2ம் எதிர்மனுதாரரின் ஆட்சேபணையும் குறியீடு செய்யப்படுகிறது). மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

நான் வேலைபார்த்ததற்கு வருமானத்திற்கும், எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, சரிதான். TN 60 R 2521பதிவு எண் கொண்ட

பஜாஜ் டிஸ்கவர் எனக்கு சொந்தமானது என்றால், சரிதான்.. ஆர்.சி.புக் பாலிசி காப்பி புதிய வாகனத்தின் பதிவு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, ஓட்டுநர் உரிமம் மட்டும் தாக்க்ல் செய்துள்ளேனன். இவ்வழக்கு வாகன விபத்தானது சின்னமனூர்– பாளையம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது நடந்தது. நான் ஓட்டி சென்ற வாகனம் இரண்டு நபர்கள் பயணம் செய்யக்கூடிய வாகனம் ஆகும். 5வயது பையன், எனது மனைவி மற்றும் நான் பயணம் செய்தோம். வாகனத்தில் மூன்று நபர்கள் சென்று வாகனத்தை இயக்கியதால் மேற்படி நெருக்கடியால் வண்டி ஓட்டப்பட்டதால், சரியாக வண்டி ஓட்டப்படவில்லை என்றால், சரி அல்ல. TN 63 BC 0385வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த வாகனம் ஆகும். மேற்படி காரை ஓட்டி வந்த நபர் கவனமாகவும், இடது பக்கமாக ஓட்டி வந்துள்ளார் என்றால், சரி அல்ல. வாகன விபத்து சமயத்தில் ரோட்டின் நடு மையத்தில் நடந்துள்ளதால், நான்தான் கவனக்குறைவாக வந்து விபத்தை ஏற்படுத்தினேன் என்றால், சரி அல்ல. எனது இருசக்கர வாகனம் மோதி காரின் வலது பக்கம் சேதமாகிவிட்டது என்றால், சரி அல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை எடுத்துக்கொண்டு, பூரண குணமடைந்த பிறகு வீடு திரும்பினேன் என்றால், சரிதான். என்னுடைய மனைவியும், அரசு மருத்துமனவையில்தான் சிகிச்சை எடுத்துக்கொண்டு, பூரண குணமடைந்த பிறகு வீடு திரும்பினேன் என்றால், சரிதான். நான் ஒரு வார காலமும், எனது மனைவி மூன்று நாட்களும் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டோம். நான் வாகனத்தை ஓட்டீ சென்றபோது தலைகவசம் அணிந்து செல்லவில்லை என்றால், சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டு தொகை நியாயமற்றது என்றாலும், அதற்கு போதுமான ஆணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்ல என்றாலும், நான் என்னுடைய கவனக்குறைவால் மூன்று நபர்கள் விபத்திற்கு காரணமாகியுள்ளேன் என்றாலும், சரி அல்ல.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.05 16:43:37 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni. Date: 05.02.2026.